நிலத்தடி நீர் மட்டத்தை பெருக்கிடவும், நீர் வழங்கல் ஆதாரங்களை அதிகரிப்பதற்கு நிரந்தர மற்றும் நிலையான தீர்வுகளைக் கண்டறிவதற்கும், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் 260 மில்லியன் லிட்டர் கழிவுநீரை மூன்றாம் நிலை சுத்திகரிப்பின்மூலம் சுத்திகரித்து, மறுபயன்பாட்டிற்காக சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள நீர்நிலைகளில் விடுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. அதேபோன்று, கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, சேலம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிகளில் உள்ள நீர்நிலைகளில் கழிவுநீர் கலப்பதைத் தடுக்க, சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவுநீரினை மறுசுழற்சி செய்து தொழிற்சாலைகள் மற்றும் நிலத்தடி நீர் செறிவூட்டுதல் போன்ற பல்வேறு பயன்பாடுகளுக்கு உபயோகிக்கும் சாத்தியக்கூறுகளைக் கண்டறிய உரிய ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. கோயம்புத்தூர் மாநகராட்சி, தமிழ்நாட்டில் இரண்டாவது பெரிய மாநகராட்சியாகும். இங்கு நாளுக்குநாள் அதிகரித்துவரும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும்பொருட்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் கோயம்புத்தூரில் ஓர் ஒருங்கிணைந்த நவீன பேருந்து நிலையம் அமைக்கப்படும் என அறிவித்திருந்தார்கள். அதனடிப்படையில், வெள்ளலூரில் 61.62 ஏக்கர் பரப்பளவில், 178.26 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அரசு மானியம் மற்றும் உள்கட்டமைப்பு நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெற்று, நடப்பு நிதியாண்டில் இப்பேருந்து நிலையம் செயலாக்கத்திற்கு கொண்டுவரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) அங்கன்வாடி மையக் குழந்தைகளுக்கு இரண்டு இணை இலவச வண்ணச் சீருடை வழங்குதல், 6 அரசு கூர்நோக்கு இல்லங்களை 16 மாவட்ட இளைஞர் நீதிக் குழுமங்களுடன் காணொலி காட்சிமூலம் இணைத்தல் தொடர்பான சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2019 ஜூலை 11] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

அங்கன்வாடி மையங்களில் முன்பருவக் கல்வி பயில வருகை புரியும் குழந்தைகளுக்கு 2012-2013 மற்றும் 2013-2014 ஆம் ஆண்டு முதல் இரண்டு இணை இலவச வண்ணச் சீருடைகள் வழங்கும் திட்டம் 10 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினால் குழந்தைகளின் வருகை அதிகரித்துள்ளது. இத்திட்டம் தருமபுரி, நாமக்கல், இராமநாதபுரம், சேலம், திருவண்ணாமலை, திருவாரூர் மற்றும் விருதுநகர் ஆகிய 7 மாவட்டங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு 6.51 கோடி ரூபாய் செலவில் விரிவுபடுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின்கீழ், அரசு மற்றும் சொந்தக் கட்டடங்களில் செயல்படும் அங்கன்வாடி மையக் கட்டடங்களில் ஏற்படும் பழுதுகளை சீர்படுத்த, நடப்பாண்டில் 1,133 அங்கன்வாடி மையக் கட்டடங்களுக்கு தலா 2 இலட்சம் ரூபாய் வீதம் மொத்தம் 22.66 கோடி ரூபாய் செலவில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. அங்கன்வாடி மையங்களை தூய்மையாக பராமரிக்கவும், அங்கன்வாடி மைய பயன்பாட்டிற்குத் தேவைப்படும் பொருட்களை உடனே வாங்குவதற்கும், சிறிய வகையிலான கட்டடப் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளும்பொருட்டும், ஓர் அங்கன்வாடி மையத்திற்கு 3,000 ரூபாய் வீதம் 38,489 அங்கன்வாடி மையங்களுக்கு வருடாந்திர பராமரிப்பு நிதி சுமார் 11.55 கோடி ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. 10,888 அங்கன்வாடி மையங்களுக்கு நாற்காலி, இரும்பு அலமாரி, நீர்வடிகலன் (Water Filter) போன்ற அறைகலன்கள் 10.59 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. அங்கன்வாடி மையங்களுக்கு வருகின்ற தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் பொதுவான உடல் உபாதைகள், காய்ச்சல், பேதி, காயம், தோல் தொற்று ஆகியவற்றை சமாளிக்கும் வகையில், எளிதாக பயன்படுத்தக்கூடிய மருத்துவப் பொருள் அடங்கிய மருத்துவப் பெட்டியும், கைத்துண்டு, சீப்பு, நகவெட்டி மற்றும் சோப்பு அடங்கிய சுகாதாரப் பெட்டியும், 31 மாவட்டங்களில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு நடப்பாண்டில் 7.35 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜூலை 11 முற்பகல் 11-10

6. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ், நடப்பாண்டில் 5,970 சத்துணவு மையங்களுக்கு சமையல் உபகரணங்கள் சுமார் 8.63 கோடி ரூபாய் செலவில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

7. சத்துணவு மையங்களில் காய்கறித் தோட்டம் அமைத்து, காய்கறிகளை உற்பத்தி செய்து பயன்படுத்த ஏதுவாக, தோட்டக்கலைத் துறையின் உதவியுடன் காய்கறித் தோட்டம் அமைக்க முதற்கட்டமாக, ஒரு சத்துணவு மையத்திற்கு 5,000 ரூபாய் வீதம் 9,915 சத்துணவு மையங்களில் சுமார் 4.96 கோடி ரூபாய் செலவில் காய்கறித் தோட்டம் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

8. வறுமையாலும், பல்வேறு கடினமான சூழ்நிலைகளாலும் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு பாதுகாப்பு அளித்து பராமரிப்பதற்கு, அன்னை சத்தியா அரசினர் குழந்தைகள் இல்லம், இராமநாதபுரம் நகரத்தில் 70 பெண் குழந்தைகளுடன் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் இந்த இல்லத்திற்கு அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் கொண்ட புதிய கட்டடம் 1,614 சதுர மீட்டர் பரப்பளவில் 5.28 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

9. சென்னை, கெல்லீஸில் அரசு கூர்நோக்கு இல்லம் செயல்பட்டு வருகிறது. இந்த இல்லத்திலுள்ள 150 சிறார்களின் பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் அவர்களின் மறுவாழ்விற்குரிய பயிற்சிகள் வழங்கிடத் தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் கொண்ட கூடுதல் கட்டடங்கள் 4.53 கோடி ரூபாய் செலவில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

10. தற்போது, அரசு கூர்நோக்கு இல்லங்களில் தங்கியுள்ள சிறார்களை ஒவ்வொரு விசாரணை நாளிலும் சம்பந்தப்பட்ட மாவட்ட இளைஞர் நீதிக் குழுமங்களுக்கு அழைத்துச் சென்று வர வேண்டியுள்ளது. ஏற்கெனவே, 8 மாவட்டங்களில் இளைஞர் நீதிக் குழுமங்கள் கூர்நோக்கு இல்லங்களுடன் இணைக்கப்பட்டு, கூர்நோக்கு இல்ல சிறார்களிடம் காணொலிக் காட்சிமூலம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

2019 ஜூலை 11] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

தற்போது எஞ்சியுள்ள தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம், கடலூர், கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாவட்டங்களிலுள்ள 6 அரசு கூர்நோக்கு இல்லங்களை அவற்றுடன் தொடர்புடைய 16 மாவட்டங்களிலுள்ள இளைஞர் நீதிக் குழுமங்களுடன் காணொலிக் காட்சிமூலம் இணைக்கும் பணிகள் எல்காட் நிறுவனம்மூலம் 2.6 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) மாற்றுத் திறனாளிகள் உதவியாளரை வைத்துக்கொள்ள மாதாந்திர பராமரிப்புத் தொகையை உயர்த்தி வழங்குதல், ஆவின் பால் நிறுவனம் நடத்தும் மாற்றுத் திறனாளிகள் பால் பொருட்களை வாங்க மானியம் வழங்குதல் தொடர்பான மாற்றுத் திறனாளிகள் நலத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன வளர்ச்சி குன்றியோர், கடுமையாக தசைச் சிதைவு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகையாக மாதம் 1,500 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. அதிக உதவி தேவைப்படும்* (High Support need) *800 மாற்றுத் திறனாளிகள் தங்களுடன் ஓர் உதவியாளரை வைத்துக்கொள்ள ஏதுவாக, அவர்களுக்கு மாதாந்திர பராமரிப்புத் தொகையுடன் கூடுதலாக 1,000 ரூபாய் உதவித் தொகை நடப்பு நிதியாண்டில் 96 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.* (மேசையைத் தட்டும் ஒலி)

2. தமிழ்நாட்டில் தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பகல் நேர பராமரிப்பு மையங்கள் 4 மாவட்டங்களில் அரசின் நிதியுதவியுடன் செயல்பட்டு வருகின்றன. தற்போது கூடுதலாக 10 மாவட்டங்களில் தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உபகரணங்களுடன்கூடிய பகல் நேர பராமரிப்பு மையங்கள் 2.65 கோடி ரூபாய் செலவில் இந்த நிதியாண்டில் தொடங்கப்படும். இதன்மூலம், 250 தசைச் சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகள் பயன்பெறுவர். (மேசையைத் தட்டும் ஒலி)

3. மாற்றுத் திறனாளிகளின் பொருளாதார மேம்பாட்டிற்காக மானியத்துடன்கூடிய பல்வேறு சுய வேலைவாய்ப்புத்